தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 23 | ஜுலை 2023 | கனி 8



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

MONTHLY
THE WORD OF CHRIST


# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 43
தலைப்பு : முதற்பலன், முதற்கனி – First fruit
வேத வாசிப்பு : உபாகமம் 26:1-11

1. விளைச்சலின் முதற் கனி - யாத்.23:19
2. கர்த்தரை கனம்பண்ணு - நீதி.3:9
3. கர்த்தர் உனக்குக் கொடுக்கும் - உபா.26:2.3




மாத இதழுக்கான சந்தா செலுத்த மூன்று வழிகள்

GPAY & PhonePe - 9443558041



India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946
Branch Batlagundu



JOIN OUR
WORLD EVANGELISM
BIBLE SCHOOL
RIGHT NOW



Contact Us: 6379350509


## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் டெலிவிஷன் நிகழ்ச்சிகள்

Our TV Program: All Days of the Week

*Every Sunday,Thursday & Saturday 6.00 P.M on Heaven TV*

*Every Monday, Tuesday & Wednesday 6.00 P.M on Joy TV*

*Every Friday & Saturday 8.30 P.M on Nithyam TV*

YouTube : the word of christ






**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...

ஆசிரியருரை.
செய்திகள்: ஜெ.சி.சோட். பெட்டி சோட்.
மற்றும்
வேதபாடம். வாலிபர் பகுதி. பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி. வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 23 ஜூலை – 2023 கனி – 8


ஆசிரியருரை

## விசுவாசத்தின் கதவு
The Door of Faith



உலகத்தில் உள்ள அனைவரையும் தேவன் இரட்சிக்கும்படியாக திட்டமிட்டுள்ளார். ஆகையால் விசுவாசத்தின் கதவு இப்பொழுது திறக்கப்பட்டுள்ளது. "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப்பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" என பேதுரு தம்முடைய பிரசங்க வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ளார் (அப்.10:35). குறிப்பாக யூதர்கள் தங்களுக்கு மட்டுமே தேவனுடைய இரட்சிப்பு இருப்பதாக எண்ணிக்கொண்டிருந்தனர். புறஜாதிகளும் இரட்சிக்கப்படும்படியாக தேவன் திட்டம் கொண்டார். உலகத்தில் எவர்கள் அவருக்குப் பயந்து நீதியைச் செய்கிறார்களோ அப்படிப்பட்டவர்களை கர்த்தர் நேசிக்கிறார். அவர்களுக்கு தம்முடைய வழியைப்போதிக்கிறார். ஆகையால் சத்தியவான் எவனும் அவருடைய சத்தம்கேட்கிறான். "பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்" என்று அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுகிறார் (1யோவா.4:14). ஆம், உலகத்தை இரட்சிக்கும்படியாக தேவன் தம்முடைய குமாரனை தெரிந்துகொண்டார். பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும் பிதாக்களுக்குத்திருவுளம்பற்றின தேவன் இந்தக்கடைசி நாட்களில் தம்முடைய குமாரன் மூலமாக திருவும்பற்றினார். "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவா.3:17). இயேசுவின் பிறப்பு உலகத்திற்கு கிடைத்த நற்செய்தியாக இருந்தது. ஏனெனில் அவர் மூலமாக உலகத்தை இரட்சிக்க தேவன் அவரை உலகத்தில் பிரவேசிக்கச் செய்தார். இயேசு வராமலிருந்தால் உலகத்திற்கு மீட்பு என்பதில்லை. அவராலே உலகம் இரட்சிப்படுகிறது என காண்கிறோம்.

இயேசுவானவர் யூதா கோத்திரத்தில் தோன்றினார் என்பது பிரசித்தமாயிருக்கிறது. ஆனால் அந்த யூதர்கள் இயேசுவின் போதனைகளை நிராகரித்தனர். பேதுரு தனது முதல் பிரசங்கத்தில் குறிப்பிடும்போது; "ஆகையால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய்

அறியக்கடவர்கள் என்றான்" (அப்.2:36). எந்த கோத்திரத்தில் இயேசுவானவர் தோன்றினாரோ அந்த கோத்திரத்தாரே இயேசுவை சிலுவையில் அறைந்து கொலைசெய்ய அதிக காரணமாயிருந்தார்கள். இந்த யூதர்களுக்கு ஆண்டவருடைய போதனைகள் முரண்பாடாக தோன்றியது. அநேக பழைய ஏற்பாட்டு சம்பவங்களையும் ஆண்டவர் தம்முடைய போதனைகள் மூலமாக எடுத்துரைத்தார். மேலும் தான் தேவனிடத்தில் வந்தவர் என்பதை அவர்களுக்கு நிரூபிக்க அநேக அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்தார். அவர்களோ அவரை புறம்பாக்கிப்போட்டார்கள். இன்றைக்குங்கூட யூதர்கள் ஆலய வழிபாடுகளை செய்து நியாயப்பிரமாணத்தின்படி வாழவும், மோசேயின் கட்டளைகளைக் கைக்கொள்ளவும் பழையபிரமாணத்தின்படி ஜீவிக்கவுமே விரும்புகின்றனர். மேலும், எருசலேமைக்குறித்து கர்த்தர் சொல்லும்போது; "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" என்கிறார் (லூக்.13:34). அந்தப்படியாக அனுப்பப்பட்டவர்களை தாம் நேசித்த ஜனங்கள் புறம்பாக்கிப்போட்டார்கள். ஆண்டவர் தம்முடைய சீடர்களை அனுப்பும்போது கூட இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு போங்கள் என்று முதலாவது அவர்களிடத்தில் அனுப்பினார்.

பவுல் பர்னபா போன்றோர் அவர்கள் மத்தியில் பேசும்போது அநேகர் விசுவாசித்தனர். அப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் சில புத்திமதியான வார்த்தைகளைக்கொடுத்தனர். "ஜெபஆலத்தில் கூடின சபை கலைந்துபோனபின்பு, யூதரிலும் யூதமார்க்கத்தமைந்த பக்தியுள்ளவர்களிலும், அநேகர் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றினார்கள். அவர்களுடனே இவர்கள்பேசி, தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொன்னார்கள்." (அப்.13:43). சிலர் பொறாமைகொண்டு எதிரிடையாக பேசினார்கள். எல்லா இடங்களிலும் பொறமைப்படக்கூடிய ஜனங்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய நியமத்திற்கு எதிராக நின்றார்கள். "அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்தியஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" என்று சென்றுவிட்டார்கள் (அப்.13;46). மேலும் "யூதர்கள் பக்தியும் கனமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலையும் பர்னபாவையும் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக அவர்களைத் துரத்திவிட்டார்கள்" (அப்.13;50). ஆதிமுதலாக தேவன் அவர்களைத் தெரிந்துகொண்டு ஆசீர்வதித்து வந்தார். அவர்களோ அதற்கு அபாத்திரமாக போனார்கள். அப்போஸ்தலர்களும் முதலாவது அவர்களுக்கே சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக சென்றார்கள். அவர்களோ அந்த சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல், அப்போஸ்தலர்களை துன்பப்படுத்தவும், தங்களுடைய எல்லைகளை விட்டுபோகும்படியாகவும் செய்தார்கள். அப்போஸ்தலர்களோ ஏற்றுக்கொள்ளாத இடங்களில் உங்கள்

கால்களில் படிந்த தூஷியையும் உதறிப்போடுங்கள் என்று ஆண்டவர் சொன்னபடி அந்தபட்டணங்களைவிட்டு புறஜாதியார் நாடுகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கும்படியாக கடந்து சென்றார்கள்.

புறஜாதிகள் கர்த்தருடைய வசனத்தை கேட்பதில் மிகவும் தீவிரமாக இருந்தார்கள். அப்போஸ்தலர்கள் "யூதருடைய ஜெபஆலயத்திலிருந்து புறப்படுகையில், அடுத்த ஓய்வுநாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக்கொண்டார்கள்" (அப்.13:42). அப்போஸ்தலர்கள் போதித்தது யூதர்களுடைய ஜெபஆலயத்தில் அதை வாஞ்சையோடு கேட்டவர்கள் புறஜாதிகள். அப்பொழுது விசுவாசத்தின் கதவு திறக்கப்பட்டுள்ளதை அறிகிறோம். இந்த சந்தோஷத்தை அப்போஸ்தலர்கள் மூப்பர்களுக்கும் சபையாருக்கும் தெரியப்படுத்தினார்கள். "அவர்கள் அங்கே சேர்ந்தபொழுது சபையைக் கூடிவரச் செய்து, தேவன் தங்களைக் கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத்திறந்ததையும் அறிவித்து, அங்கே சீஷருடனேகூட அநேகநாள் சஞ்சரித்தார்கள்" என அப்.14:27,28 வசனங்களில் படிக்கிறோம். முதல் நூற்றாண்டு காலத்தில் புறஜாதிகளுக்கும் விசுவாசத்தின் கதவு திறக்கப்பட்டதைக்குறித்து அப்போஸ்தலரும் சபையாரும் மிகவும் சந்தோஷப்பட்டு புறஜாதிநாடுகளுக்கு தொடர்ந்து சென்று சுவிசேஷத்தை சொல்லுவதில் தீவிரமாக இருந்து செயல்பட்டனர். ஆகையினாலே நம்மைப்போன்ற புறஜாதிநாடுகளும் கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் அறிந்துகொண்டது. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய விருப்பமில்லை. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டுமென தேவன் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் என காண்கிறோம்.

கொர்நேலியு வீட்டாரின் இரட்சிப்பு விஷயத்தில் பேதுருவுக்கு சில காரியங்கள் உணர்த்தப்பட்டது. "வானம் திறந்திருக்கிறதாகவும் நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும் இருக்கிறதாகவும் கண்டான். அல்லாமலும்; பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான். அப்பொழுது; தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே என்று இரண்டாந்தரமும் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று. மூன்றாந்தரமும் அப்படியே உண்டாயிற்று. பின்பு அந்தக்கூடு திரும்ப வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது" (அப்.10:11-16).

இந்த தரிசனத்தின்படி பேதுரு உணர்த்தப்பட்டு கொர்நேலியுவின் வீட்டாருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக அனுப்பப்பட்டான். கொர்நேலியுவின் வீட்டில் கூடியிருந்தவர்களை பேதுரு நோக்கி: "அந்நிய ஜாதியானோடே கலந்து அவனிடத்தில் போக்குவரவாயிருப்பது யூதனானவனுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; அப்படியிருந்தும் எந்த மனுஷனையும் தீட்டுள்ளவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு தேவன் எனக்குக் காண்பித்திருக்கிறார்" என்றும் சொன்னான். மேலும்


கொர்நேலியுவே, உன் ஜெபம் கேட்கப்பட்டது, உன் தானதருமங்கள் தேவசந்நிதியில் நினைத்தருளப்பட்டது. யோப்பா பட்டணத்துக்கு ஆள் அனுப்பி, பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை வரவழைப்பாயாக, அவன் கடலோரத்திலே தோல்பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான்; அவன் வந்து உன்னிடத்தில் பேசுவான் என்றார். "அந்தப்படியே நான் உடனே உம்மிடத்திற்கு ஆள் அனுப்பினேன்; நீர் வந்தது நல்ல காரியம்; தேவனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு நாங்கள் எல்லாரும் இப்பொழுது இங்கே தேவசமுகத்தில் கூடியிருக்கிறோம் என்றான். அங்கே பேதுருவின் பிரசங்கத்தை கேட்டு தங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தார்கள். அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான் எனக் காண்கிறோம்.

இச்செய்தியை வாசிக்கும் அன்பு வாசகரே, நீ கர்த்தராகிய இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் அறிந்துள்ளாயா? அவர் உனக்காக சிலுவையில் மரித்தார். அவருடைய மரணத்தினாலே நாம் பாவமன்னிப்பைப் பெறுகிறோம். உலகத்தில் உள்ள யாவரையும் தேவன் இரட்சிக்கும்படியாக தம்முடைய குமாரனை சிலுவையில் மரிக்கும்படியாக ஒப்புக்கொடுத்தார். புறஜாதிகளுக்கும் விசுவாசத்தின் கதவு இப்பொழுது திறக்கப்பட்டுள்ளது. இதை நீ விசுவாசித்தால் கொர்நேலியு வீட்டாரைப்போல நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். இன்றே இரட்சிக்கப்பட உங்களை சுவிசேஷத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

**உங்களில் விசுவாசத்தை துவக்குகிறவர் யார்?**

ஒவ்வொருவருக்கும் விசுவாசம் மிகவும் அவசியம். விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். இந்த விசுவாசம் எப்படி வரும். விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என நாம் ரோமர் 10;17-ம் வசனத்தில் படிக்கிறோம். இந்த விசுவாசத்தை துவக்குகிறவர் இயேசு. கொர்நேலியுவுக்கு விசுவாசத்தை துவக்கினவர் இயேசு. அவன் பேதுருவை சந்திக்கும்படியாக ஆட்களை அனுப்பினான். பேதுரு கொர்நேலியுவின் வீட்டாருக்கு சென்று சுவிசேஷம் அறிவித்தான் அவனும் அவனுடைய வீட்டாரும் இரட்சிக்கப்பட்டார்கள். அதைப்போல உங்களில் விசுவாசத்தை துவக்கும் இயேசுவுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றிநெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என்கிறார் எபிரெய ஆசான் (எபி.12:1). பூமியிலே எல்லோருக்கும் ஒரு ஓட்டம் நியமிக்கப்பட்டிருக்கிறது. அநுதினமும் ஓடிக்கொண்டிருக்கிற கடிகாரம் போன்ற நம்முடைய வாழ்க்கையில் இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் ஓடவேண்டும். அப்பொழுதே நிலையான ஆசீர்வாதத்தை, ஓட்டத்தை துவக்கின இயேசுவிடம் பெறமுடியும். நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் பார்த்து ஏமாற்றப்பட்டுபோய்விடாதிருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



# பாவம் நிறைந்த உரையாடல்

# Sinful Speech

*-J.C.Choate*

ஒரு கிறிஸ்தவனாக, "பழைய பாவமனிதன் களையப்பட்டு, கிறிஸ்து இயேசுவுக்குள் புதிய நீதி நிறைந்த மனிதனைத் தரித்துக் கொள்ள வேண்டியது மிக அவசியம். உண்மையில் அது தான் கிறிஸ்தவம்.

**வீண்பேச்சு:** வீண்பேச்சு என்பது "சாதாரண அல்லது கட்டுபாடற்ற உரையாடல் அல்லது மற்றவர்களைப் பற்றிய அறிக்கைகள், பொதுவாக உண்மை என உறுதிப்படுத்தப்படாத விவரங்களை உள்ளடக்கியது". எப்போதாவது நீங்கள் மரம் அல்லது கல்லினால் செதுக்கப்பட்ட மூன்று குரங்குகளைப் பார்த்திருக்கிறீர்களா? ஒன்று தன் கைகளினால் தன் கண்களை மூடியிருக்கும், இன்னொன்று தன் காதுகளை தன் கைகளினால் மூடியிருக்கும், மூன்றாவது குரங்கு தன் வாயை தன் கைகளினால் மூடியிருக்கும். இந்த அறிக்கையின் கீழே "குரங்கு தீமையைப் பார்க்காது, குரங்கு தீமையைக் கேட்காது, குரங்கு தீமையைப் பேசாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் குரங்குகள் கிடையாது, ஆனால் அந்த ஆலோசனையை நாம் பின்பற்றுவது நல்லது.

வீண்பேச்சு பேசுவது பாவமா? முதலாவது, யாக்கோபு நாக்கு மற்றும் இதனால் நமக்கு ஏற்படும் பிரச்சனைகளைப் பற்றி நமக்குச் சொல்லுகிறான் அவன், "என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக. நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான். பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம் போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம். கப்பல்களையும் பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால் அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும். அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்திவிடுகிறது! நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! சகலவிதமான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான

விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது. ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது. உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்'' (யாக். 3:1-12) என்று சொல்லுகிறான்.

அந்த நீண்ட அறிக்கையில், தேவனால் ஏவப்பட்ட மனிதன், நாவின் ஆபத்துக்கள் மற்றும் நம் நாக்கு நம்மை இட்டுச் செல்லக்கூடிய அனைத்துப் பிரச்சனைகள் பற்றியும் வலியுறுத்துகிறான். விலங்குகள், பெரிய கப்பல்கள் மேலும் பலவற்றை நாம் எவ்வாறு கட்டுப்படுத்த முடியும் என்பதைப் பற்றியும், ஆனால் அதற்கு மாறாக, நாக்கு ஒரு சிறு அவயவமாயிருந்தபோதிலும் அதைக் கட்டுப்படுத்துவது மிக மிக கடினம் என்கிறான். அவன் தொடர்ந்து நாவினுடைய மாறுபட்ட நிலையை காண்பிக்கிறார்: ஒரு அத்திமரம் அத்தி பழங்களை மட்டும் கொடுக்கிறது, திராட்சச் செடி திராட்சப் பழங்களை மட்டும் கொடுக்கிறது, அப்ப்டியே ஒரு நீரூற்று கசப்பான அல்லது தித்திப்பான தண்ணீரை மட்டும் கொடுக்கிறது, ஆனால் இரு சுவையை கொடுப்பதில்லை; இருந்த போதிலும் ஒரே நாவிலிருந்து துதித்தலும் சபித்தலுமாக இரண்டும் புறப்படுகிறது.

மீண்டும் யாக்கோபு, ''உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னைத் தேவபக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும்'' (யாக்.1:26) என்று சொல்லுகிறான். கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது பவுல் ''ஆகிலும் நான் வந்து, உங்களை என்மனதின்படியிருக்கிறவர்களாகக் காணாமலும், நானும் உங்கள் மனதின்படியிருக்கிறவர்களாகக் காணப்படாமலுமிருப்பேனோவென்றும்; விரோதங்கள், புறங்கூறுதல், கோட்சொல்லுதல், இறுமாப்பு, கலகங்கள் ஆகிய இவைகள் உங்களுக்குள்ளே உண்டாயிருக்குமோவென்றும்; மறுபடியும் நாம் வருகிறபோது, என் தேவன் உங்களிடத்தில் என்னைத் தாழ்த்தும்படிக்கு முன் பாவஞ்செய்தவர்களாகிய அநேகர் தாங்கள் நடப்பித்த அசுத்தத்தையும் வேசித்தனத்தையும் காமவிகாரத்தையும் விட்டு மனந்திரும்பாமலிருக் கிறதைக்குறித்து, நான் துக்கப்படவேண்டியதாயிருக்குமோவென்று பயந்திருக்கிறேன்'' (2கொரி.12:20,21) என்றான்.

கொரிந்து பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்கள் உலகப்பின்னணியிலிருந்து வெளியே வந்திருந்தார்கள். அவர்களில் சிலர் தாங்கள் உலகத்திலிருந்துபோது செய்திருந்த அந்தக் காரியங்களைத் தொடர்ந்து செய்து குற்றமுள்ளவர்களாக

இருந்தனர். அவர்கள் பாவம் நிறைந்த வார்த்தைகளைப் பேசுவதற்குப் பயன்படுத்தும் நாவிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டுமென்று பவுல் அவர்களுக்குப் போதித்துக் கொண்டிருந்தான். அவன் பொறாமை, கோபம், கலகம், புறங்கூறுதல், கோட்சொல்லுதல் இதுபோன்ற பலகாரியங்கள் இருக்கின்றதாக கூறுவதைக் கவனியுங்கள். நிச்சயமாக இவையனைத்தும் ஒன்றாக செல்கின்றன. ஒரு நபர் இந்த பாவங்களில் ஒன்றில் குற்றவாளியாக இருக்கும்போது, அவர் பொதுவாக மற்றவர்களை குற்றவாளியாகக் கருதுகிறான்.

பவுலின் பட்டியலில் ஒரு பாவம், **"புறங்கூறுதல்"** அதாவது அவர்கள் தங்கள் நண்பர்களாக இருந்தவர்களைப் பற்றி, "கிசுகிசுக்கும்" ஊகங்கள் மற்றும் அல்லது அப்பட்டமான பொய்களைப் பற்றி பேசினார்கள் என அர்த்தமாகிறது. பின்னர், நிச்சயமாக அவர்களின் நண்பர்களுக்கு நண்பர்கள் இருந்தனர் மேலும் இந்த கிசுகிசுப்பான "உண்மைகள்" தொடர்ந்து பரப்பப்பட்டு, ஒவ்வொரு பகிர்விலும் வளர்ந்துகொண்டிருக்கும். இன்று கிறிஸ்தவத்திற்கு கண்டனம் செய்யப்படுவது போல், பவுல் இயல்பாகவே இவை அனைத்தையும் கண்டித்தார்.

மோசேயின் நாட்களில் இருந்தவர்களைப் பற்றிய விஷயங்களில் தனித்து நிற்கும் ஒன்று, இஸ்ரவேல் புத்திரர் அவருக்கு எதிராக முறுமுறுத்ததற்காக அடிக்கடி குற்றவாளிகளாக இருந்தார்கள் என்பதுதான். எந்த விதத்திலும் இது நியாயப்படுத்தப்படவில்லை. உண்மையில் அவர்களை வழிநடத்திக் கொண்டுவந்த தேவன் ஒருவரே. அப்போஸ்தலனாகிய பவுல் இதனை 1கொரிந்தியர் 10ல் ஒப்பிட்டு, மேலும் அதன்பின் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர் களுக்கு அறிவுறுத்தினார். "அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனாலே அழிக்கப்பட்டார்கள்; அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள்" (1கொரி.10:10) என்றார். எல்லாவற்றிலும், அனைவரிடத்திலும் குறைகளைக் கண்டறிவது, குறை கூறுவது மற்றும் உங்களுக்குப் பிடிக்காத விஷயங்களைப் பற்றி உங்கள் நண்பர்கள் மற்றும் அண்டையிலிருப்பவர்களிடம் தீங்கிழைக்கும் வகையில் பேசுவது மிகவும் எளிதானது. இத்தகைய அணுகுமுறைகள் மற்றும் வதந்தி பேச்சுக்களால் எந்த நன்மையும் வராது.


உன் வீட்டிற்கு அருகிலுள்ள
சபையை தேடாதே
வேதாகமத்திற்கு நெருக்கமாகவுள்ள
சபையை கண்டுபிடி

Don`t Look for the nearest
Church to your house
Find the Church closest
To the Bible




## திருமணம் போராட்டத்திற்கு தகுதியானதல்ல
## Marriage is not worth the struggle

-Betty



ஆதியிலே, ஆதியாகமம்1 மற்றும் 2−ன்படி, தேவன் வானத்தையும், பூமியையும் மேலும் சகலவித உயிருள்ள விருட்சங்களையும், மிருகங்களையும் மட்டும் சிருஷ்டிக்கவில்லை மாறாக அவர் தம்முடைய சுயசாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள தம்முடைய சிருஷ்டியை முடிசூட்டினார்: “பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; .....தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் ...... இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்” **(ஆதி.1:26,27; 2:24).**

இயேசுவின் ஊழியநாட்களில், அவர் விவாகம் மற்றும் விவாகரத்து குறித்து கேள்வி கேட்கப்பட்டு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்” **(மத்.19:4−6).**

மோசேயின் கட்டளையின் கீழ் தள்ளுதற்சீட்டைக் கொடுத்து விவாகரத்து செய்ய அனுமதிக்கப்பட்டதைக் குறித்து, இயேசு, “உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; **ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை**. ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” **(மத்.19:8,9).**

புருஷன்/மனைவி உறவின் நெருக்கத்தைப்பற்றிய இன்னொரு விளக்கத்தினை, நாம் எபேசியர்5:22−33−ல் வாசிக்கிறோம், “மனைவிகளே, கத்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப்புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்;... ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

“புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து...... அதற்காக ஒப்புக்கொடுத்தார். ...அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்து காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். ...அந்தப்படியே, உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்”.

இவ்வசனங்கள் விவாகம் தேவன் திட்டமிட்ட முன்னேற்பாடாயிருக்கிறது என்பதை தெளிவாக விளக்குகின்றன. தலைவனாகக் கருதப்படும் புருஷனானவன் குடும்பத்தில் அன்புகூருகிற தலைவனாயிருக்கும்போதும், மனைவி தன் புருஷனிடத்தில் அன்புகூர்ந்து பயபக்தியாயிருக்கும் போதும், எல்லாவகையிலும் தங்களை 'ஒரே' மாம்சமாக மாற்றுவதற்கு ஒப்படைக்கும் போதும், அவர்கள் ஒரு சீரிய, உயர்ந்த உறவினைக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் உலகத்தில் மிகக் குறைந்தவர்களே "பூரணமாக இருக்கின்றனர். இருவேறுபட்ட மக்களுடைய இணைப்பு– ஒவ்வொரு தோற்றத்திலிருந்து வேறுபாடு, ஏனென்றால் ஒருவர் ஆண் இன்னொருவர் பெண்–மேலும், ஏற்றுக்கொள்ளுதல், அவர்கள் ஒரு முழுமையில் இருபாதியாக இருக்கும்படி நிச்சயிக்கப்பட்டுள்ளார்கள், ஆனால் முழுமையானது உண்மை, தொடர்ச்சியான அன்பு, மன்னிக்க முயல்வது போன்றவற்றின் மூலம் மட்டுமே போய்ச் சேருகிறது. அவர்கள் வித்தியாசமான சூழல்களையும், வித்தியாசமான மதிப்பீடுகளையும், இலக்குகளையும், மேலும் வித்தியாசமான சமய அர்ப்பணிப்புகளையும் கூட கொண்டு வருகிறார்கள். அவர்கள் அனுபவமின்மையையும், முதிர்ச்சியடையா நிலையினையும் கூட விவாகத்திற்குள் கொண்டு வருகிறார்கள். இந்த எல்லாக் காரியங்களும் பிரச்சனைகளுக்கும், தவறான புரிந்துகொள்ளுதலுக்கும், மனவேதனைகளுக்கும் காரணமாகி, முடிவாக நிதானமாக, **"திருமணம் போராட்டத்திற்கு தகுதியுடையதா?"** என்ற வினா எழுப்பவும் செய்கிறது.

இன்று பலர் விவாகத்தை 'எழுதலும் வீழ்தலும்' ஆன பலபரீட்சையைப் போல எண்ணுகின்றனர். விவாகம் "செயல்பட" வில்லையென்றால் பிறகு விவாகரத்து என்பது எளிதான தெரிந்து கொள்ளுதலாயிருக்கிறது. இவ்விதமான நினைவு **ஒப்புக்கொடுத்தலின்** அஸ்திபார மனநிலையை நீக்குகிறது. மிகச் சில மனித உறவுகள் பலவருடங்களாக ஒப்புக்கொடுத்தல் மட்டுமல்லாது விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, முடிவிலே உறவினைக் காத்துக்கொள்ளும்படியானதீர்மானம் போன்றவற்றினை தொடருகின்றன.

இதுவே விவாகத்தில் உண்மையாக இருக்கிறது. தேவன் திட்டமிட்ட விவாகம் மனித உறவுகளின் அஸ்திபாரத்தூணாக இருக்கிறது. விவாகத்தினுள் ஒரு குடும்பத்தார் பிறந்துள்ளனர், குடும்பங்கள் கட்டப்பட்டிருக்கின்றன, தேசங்கள் வளர்ந்துள்ளன நாகரிகங்கள் பெருகியுள்ளன, மேலும் தேவனோடுள்ள நித்திய வீட்டிற்கென ஆயத்தமாக்கப்பட்டுள்ளன. இது என்றென்றும் உருவாக்கப்பட்டுள்ள மிக முக்கியமான மனிதனுடைய ஸ்தாபனமாயிருக்கிறது. தேவன் இதனுடைய ஸ்தாபகர், மனுஷர்– விவாகரத்தின் மூலம், அல்லது மனநிலை பாதிக்கப்படுவதின் மூலம், உலகத்திற்கு ஒத்த நிலை வெளிப்படுகையில் உணர்ச்சி வயப்பட்ட பிரிவினையின் மூலம் வீட்டை அழிக்கத் தீர்மானத்தை உருவாக்குகிறான்– இவைகள் மனுஷருக்காக ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய உண்மையான சித்தத்திற்கு விரோதமாக இருக்கின்றன.

நீங்கள், திருமணம் போராட்டத்திற்கு தகுதியானது எனத் தீர்மானித் திருப்பீர்களென்றால் திரும்பிச்சென்று உங்களுடைய தீர்மானத்தினை மறுஆய்வு செய்யுங்கள். நீங்கள், உங்களுக்காகவும் உங்களுடைய துணைக்காகவும், விவாகரத்து மற்றும் விவாகமான நிலை–அல்லது யாரோ ஒருவரோடே வருங்கால முறையற்ற விவாகம் போன்றவற்றை தெரிந்து கொள்ளுகின்றீர்கள். இது தேவனால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது, மேலும் நீங்கள் இப்பேர்பட்ட கீழ்ப்படியாத நிலையில் இரட்சிக்கப்பட முடியாது. விவாகம் கிரியை நடப்பிக்கும், மேலும் இது எவ்வித முயற்சிகள் எடுத்தாலும் மகிமையான சந்தோஷத்தைக் கொண்டுவரும்.

ப.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

21



# பரிசுத்த வேதாகமத்தில் மோசே
# Moses In The Holy Bible

1. மோசே லேவி கோத்திரத்தான் அவன் மூன்று மாதம் ஒளித்துவைக்கப்பட்டான் - யாத்.2:1,2
2. பார்வோனின் குமாரத்தி மோசே என்று பெயர் வைத்தாள் - யாத்.2:10
3. மோசே சிப்போராளை விவாகம் செய்தான் கெர்சோம் என்ற மகனைப் பெற்றான் - யாத்.2:21
4. கர்த்தர் முட்செடியின் நடுவிலிருந்து மோசே, மோசே என்று கூப்பிட்டார் - யாத்.3:4
5. நியாயப்பிரமாணம் மோசே மூலமாக கொடுக்கப்பட்டது - யோவா.1:17
6. கொள்ளிவாய் சர்ப்பங்கள் கடித்தபோது, வெண்கல சர்ப்பத்தை நோக்கி பார்த்து பிழைத்தார்கள் - எண்.21:8,9
7. மோசே தேவனோடு 40 நாட்கள் சீனாய் மலையில் இருந்தான் - யாத்.24:18
8. எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பெற்றார்கள் - 1கொ.10:2
9. மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் - எபி.3:2
10. 120 வயதில் மோசே மரித்தான் - உபா.34:7

### இந்தப் பாடத்திற்கான கேள்வி:

*விருத்தசேதனம் மோசேயினால் உண்டானதா?*

**விடை:** இல்லை - "விருத்தசேதனம் மோசேயினால் உண்டாகாமல், பிதாக்களால் உண்டாயிற்று; பின்பு மோசே அதை உங்களுக்கு நியமித்தான்; " (யோவா.7:22)



புஏ

வேதாகம கதாபாத்திரங்கள்
**Bible Characters**

22



## பரிசுத்த வேதாகமத்தில் லாசரு
## Lazarus In The Holy Bible

1. பெத்தானியா கிராமத்தான். மார்த்தாள், மரியாள் என்பவர்களுடைய சகோதரன் - யோவா.11:1,2
2. இம்மூவரிடத்திலும் இயேசு அன்பாயிருந்தார் - யோவா.11:5
3. லாசரு மரித்துப்போனான் என்று இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்துச்சொன்னார் - யோவா.11:14
4. இயேசு மார்த்தாளை நோக்கி உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார் - யோவா.11:23
5. இயேசு கண்ணீர் விட்டார் - யோவா.11:35
6. மார்த்தாள் நாலு நாளாயிற்றே என்றாள் நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பாய் என்றார் - யோவா.11:39
7. இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து பிதாவே... - யோவா.11:41
8. லாசருவே வெளியே வா என்று உரத்த சத்தமாய் கூப்பிட்டார் - யோவா.11:43
9. யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள் - யோவா.11:45
10. உயிரோடு எழுப்பப்பட்ட லாசரு இயேசுவோடு பந்தியிருந்தான் - யோவா.12:1,2

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

*பிரதான ஆசாரியர்கள் லாசருவை கொலைபண்ண ஆலோசித்தார்களா?*

**விடை:** ஆம் - ..."பிரதான ஆசாரியர்கள் லாசருவை கொலைசெய்ய ஆலோசனை பண்ணினார்கள்" (யோவா.12:11)



## வேத அறிவுப்போட்டி 272-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. ஆம் | - நாகூம் 1:5 |
| 2. ஆம் | - கொலோ.3:22 |
| 3. ஆபகூக் | - ஆபகூ.1:12 |
| 4. இராத்திரியிலே | - 1தெச.5:7 |
| 5. செப்பனியா | - செப்ப.3:15 |
| 6. பவுல் | - 2தெச.2:17 |
| 7. திருப்தி | - ஆகாய்1:6 |
| 8. பவுல் | - 2தெச.2:14 |
| 9. சகரியா | - சகரி.5:2 |
| 10.கண்காணியானவன் | - 1தீமோ.3:2 |

### சரியான பதில் எழுதியவர்கள்


| | |
|---|---|
| 1. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 2. A. டேவிட் ஜெயசந்திரன் | - மதுரை |
| 3. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 4. Mrs. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 5. Mrs. வசந்தாரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 6. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 7. R. ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 8. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |
| 9. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 10. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 11. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 12. Mrs. ஜெபக்குட்டிமோசஸ் | - திருநெல்வேலி |
| 13. Mrs. பியூலாஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 14. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 15. Mrs. ஃபுளோரா சுந்தர் | - மதுரை |
| 16. Mrs. சந்திராஆல்பர்ட் | - திருநெல்வேலி |
| 17. Mrs. ஜேன்தர்மராஜ் | - திருநெல்வலி |
| 18. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி | - திருச்சி |
| 19. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 20. Mrs. ஜாய்மேத்யு | - வி.கே.புரம் |
| 21. Mrs. ஹெத்சிசெல்வின் | - சென்னை |
| 22. E. அதிசயம் | - பனைகுடி |
| 23. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 24. S. ஓசியா ஹரிராகவன் | - திருவள்ளூர் |
| 25. Mrs. அன்னாள் ஜெபக்கனி | - கோவை |
| 26. S. அசோக்குமார் பிரின்ஸ் | - தூத்துக்குடி |
| 27. D. விஜயகாந்தி | - வேலூர் |
| 28. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 29. A. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 30. J. பிச்சை | - விருதுநகர் |
| 31. Mrs. ஜெயாபாணிஜெபராஜ் | - மேற்கு தாம்பரம் |
| 32. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 33. Mrs. நவரத்தினம் ஞானராஜ் | - தூத்துக்குடி |
| 34. Mrs. ஜெமிநல்லையா | - கோவை |
| 35. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 36. Mrs. ரோஸ்லின் தாமஸ் | - சென்னை |
| 37. S. ஜாய்ஸ்சந்திரகாந்தா | - நல்லூர் |
| 38. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 39. Mrs. ஃபிராங்கலினா ஜான் | - ஊட்டி |
| 40. J. ஜான்சி | - ஆனைமலை |
| 41. Mrs. ருக்மணிஜெயசீலின்- தேனி | |

## வேத அறிவுப்போட்டி 273-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. மல்கியா | - மல்.2:13 |
| 2. பவுல் | - 2தீமோ.27 |
| 3. தேவன் | - ஆதி.17:5 |
| 4. நன்றாய் | - தீத்து1:9 |
| 5. ஏழாம் நாளில் | - யாத்.24:16 |
| 6. இயேசுகிறிஸ்து | - எபி.8:1 |
| 7. ஒரே | - லேவி.24:22 |
| 8. ஆம் | - யாக்.3:7 |
| 9. மோசே | - எண்.14:41 |
| 10. இதுவே | - 1பேது.2:25 |

### சரியான பதில் எழுதியவர்கள்

| | |
|---|---|
| 1. K.M. சாந்தி | - எம்.வாடிப்பட்டி |
| 2. Mrs. ஃபிராங்கலினா ஜான் | - ஊட்டி |
| 3. Mrs. சந்திராஆல்பர்ட் | - திருநெல்வேலி |
| 4. K. ராணிமூர்த்தி | - ஏர்வாடி |
| 5. A. டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 6. Mrs. வசந்தா ரபீந்திரன் | - தூத்துக்குடி |
| 7. E. அதிசயம் | - பனைகுடி |
| 8. D.A. கமலம் | - காரைக்குடி |
| 9. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 10. S. அசோக்குமார் பிரின்ஸ் | - தூத்துக்குடி |
| 11. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 12. Mrs. பியூலாஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 13. J. ஆலிவ் | - கோவை |
| 14. P. சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 15. Mrs. மேரி நிர்மலா ஆபிரகாம் | - மதுரை |
| 16. J. மேரி ஜெயக்குமார் | - மதுரை |
| 17. Mrs. ஃபுளோரா சுந்தர் | - மதுரை |
| 18. M. ராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 19. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 20. Mrs. ஜாய்மேத்யு | - வி.கே.புரம் |
| 21. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி | - திருச்சி |
| 22. A. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 23. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 24. Mrs. ஜெயாபாணிஜெராஜ் | - மேற்கு தாம்பரம் |
| 25. A. அன்னாள் ஜெபக்கனி | - கோவை |
| 26. S. ஜாய் சந்திரகாந்தா | - நல்லூர் |
| 27. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 28. Mrs. ஜெபாநியூட்ன் | - திருநெல்வேலி |
| 29. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 30. R. பாரதி | - கோபி |
| 31. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 32. C. அருள்ராஜ் | - சென்னை |
| 33. J. பிச்சை | - விருதுநகர் |
| 34. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 35. Mrs. ஜேன் தர்மராஜ் | - திருநெல்வேலி |
| 36. Mrs. ஜெமி நல்லையா | - கோவை |
| 37. R. ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 38. J. ஜான்சி | - ஆனைமலை |
| 39. E. அதிசயம் | - பனைகுடி |
| 40. D. விஜயகாந்தா | - வேலூர் |
| 41. J. இளவரசி ஜோபிதா | - கோவை |




**"தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர்"**

**நீதிமொழிகள் 30:5**



பெண்கள் பகுதி

## உடன்படிக்கைகள் – Covenants

*-Glory Arjunan*

உடன்படிக்கை என்பது உறுதியாய் நிலைத்திருப்பதற்கு, அதாவது நிலையற்றவர்களாக அலையாமலிருப்பதற்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களோடு செய்யும் ஒப்பந்தம் ஆகும். ஆளுகிறவர்கள் ஆட்சி சிறப்பாக இருக்கவேண்டுமென்று நாட்டு மக்களோடு உடன்படிக்கை செய்கின்றனர், அதாவது பல சட்டதிட்டங்களைக் கொண்டு வந்து மக்களை வழிநடத்துகின்றனர். திருமணத்தில் தங்கள் வாழ்க்கை சிறப்பாக அமையவேண்டுமென்று மணவாளனும், மணவாட்டியும் உடன்படிக்கை செய்து கொள்ளுகின்றனர். இவ்வுலகத்தின் காரியங்கள் இப்படியிருக்கும்போது, இவ்வுலகத்தையும் நம்மையும் உண்டாக்கின தேவன் தம் ஜனங்கள் தம்மிடமிருந்து கற்றுக்கொள்ளவும், தம்முடைய விருப்பத்தின்படி நடந்து சகல ஆசீர்வாதங்களையும் பெற்று வாழவும் தம்முடைய பிள்ளைகளோடு உடன்படிக்கை செய்துள்ளார். எப்படி, ஒரு உலகப்பிரகாரமான தகப்பன் தன்பிள்ளைகள் தான் விரும்புகிறபடி நடந்து தன்னுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறானோ, அதிலும் மேலாக நம்மை உண்டாக்கின தேவன் நம்மை நேசிக்கிறபடியினால் நாம் பாதைமாறி போய், அழிந்து போகாதபடி இருக்க பல்வேறு சட்டங்களையும், கட்டளைகளையும், நியமங்களையும் கொடுத்து உடன்படிக்கை செய்துள்ளார்.

நாம் அறிந்திருக்கிறபடி பரிசுத்த வேதாகமத்தில் இருபெரும் பிரிவுகள் உண்டு அவைகள் பழையஏற்பாடு (பழைய உடன்படிக்கை) மற்றும் புதிய ஏற்பாடு (புதிய உடன்படிக்கை) என்பவைகளாகும்.

பழைய உடன்படிக்கை:

பழைய ஏற்பாட்டு காலத்தில் நம்முடைய பிதாக்கள் அநேகரோடு உடன்படிக்கை பண்ணியிருந்தார்.

✦ மோசேயோடு உடன்படிக்கை பண்ணினார். கர்த்தர் மோசேயிடம், "இப்பொழுது நீங்கள் என்வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள். நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் என்று நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகள் என்றார்"(யாத்.19:5–6). கர்த்தருடைய அன்பு எவ்வளவு பெரிது! இஸ்ரவேல் ஜனங்கள் தமக்கு சொந்த சம்பத்தாகவும், பரிசுத்த ஜாதியுமாய் இருக்கவேண்டுமென விரும்பினார், ஆனாலும் தம்முடைய வாக்கை உள்ளபடி கேட்டு, தம்முடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டால் மட்டுமே இந்த

ஆசீர்வாதத்தைப் பெற்றக்கொள்ள முடியும் என நிபந்தனையையும் வைத்தார். தேவனாகிய கர்த்தர் தம் ஜனங்கள் கெட்டுப்போய்விடக்கூடாது என்பதற்காக இவ்வாறாக உடன்படிக்கை செய்தார். அவர்கள் தம்முடைய உடன்படிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டுமென விரும்பினார். இஸ்ரவேலர் அனைவரும் கர்த்தருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டார்களா? இல்லை! முடிவில் இருவர் மட்டுமே அவர் வாக்குத்தத்தம் செய்திருந்த கானானை சுதந்தரித்தார்கள்.

✦ தாவீதோடு உடன்படிக்கை பண்ணினார். "உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தின்மேல் வைப்பேன் என்றும், உன்குமாரர் என் உடன்படிக்கையையும், நான் போதிக்கும் என் சாட்சிகளையும் காத்து நடந்தால், அவர்கள் குமாரரும் என்றென்றைக்கும் உன் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்கள் என்றும், கர்த்தர் தாவீதுக்கு உண்மையாய் ஆணையிட்டார்; அவர் தவறமாட்டார்" (சங்.132:11,12) என்றார். இங்கே கர்த்தர் தம் உடன்படிக்கையையும் தாம் போதிக்கும் சாட்சிகளையும் காத்து நடந்தால் என்று சொல்லி, அவரிடமிருந்து தன் ஜனங்கள் கற்றுக் கொள்ள வேண்டுமெனவும் அதின்படி நடக்கவேண்டுமெனவும் விரும்புகிறார். "ஆகையால் கர்த்தர் சாலொமோனை (தாவீதின் குமாரன்) நோக்கி: நான் உனக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையையும் என் கட்டளையையும் நீ கைக்கொள்ளாமற்போய் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், ராஜ்யபாரத்தை உன்னிடத்திலிருந்து பிடுங்கி அதை உன் ஊழியக்காரனுக்குக் கொடுப்பேன்" (1இரா.11:11) என்றார். தாவீதின் குமாரர் கர்த்தருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டார்களா? இல்லை!

✦ கர்த்தர் ஆபிரகாமோடு உடன்படிக்கை பண்ணினார். "அந்நாளிலே கர்த்தர் ஆபிரகாமோடே உடன்படிக்கைபண்ணி... இந்தத் தேசத்தை (கானான்) உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்" (ஆதி.15:18). மேலும் என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் என்றார்" (ஆதி.17:2). "நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றார். அந்தப்படியே, அவன் பொறுமையாய் காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்" (எபி.6:14,15) "ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது; ...அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான் சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் (ஈசாக்கு) வாக்குத்தத்தின்படி பிறந்தான்" (கலா.4:22–23). ".....நாமும் ஈசாக்கைப்போல வாக்குத்த்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்" (கலா.4:28). ஆம், விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமின் பிள்ளைகளாகிய நாம் ஆசீர்வதிப்பட்டவர்களாயிருக்கிறோம்.

✦ நோவாவோடு உடன்படிக்கை பண்ணினார். "பின்னும் தேவன் நோவாவையும், அவன் குமாரரையும் நோக்கி; ...இனி மாம்சமானவைகளெல்லாம்

ஜலப்பிரளயத்தினால் சங்கரிக்கப்படுவதில்லையென்றும், பூமியை அழிக்க இனி ஜலப்பிரளயம் உண்டாவதில்லையென்றும், உங்களோடேஎன் உடன்படிக்கையை ஏற்படுத்துகிறேன் என்றார்" (ஆதி.9:9–11). இந்த உடன்படிக்கையின் அடையாளமாக "நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன்; அது எனக்கும் பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்" என்றார் (வச.13).

✧ ஆதாமோடு உடன்படிக்கை பண்ணினார் நம் தேவனாகிய கர்த்தர். ஆனால் அதாமும் அவன் மனைவி ஏவாளும் உடன்படிக்கையை மீறினார்கள். தேவனாகிய கர்த்தர் தம்முடைய சிருஷ்டிப்பின் நாளிலிருந்தே தம்முடைய பிள்ளைகளின் நன்மைக்காக சில கட்டளைகளையும் நியமங்களையும் கொடுத்து உடன்படிக்கை செய்கிறார். அதன்படியே, "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம் ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதைப் புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி.2:16,17) ஆனால் என்ன நடந்தது? அதற்கு நேர் மாறாக பிசாசு வேறொரு உபதேசத்தை உபதேசித்தான் "அப்பொழுது சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை; நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றது" (ஆதி.3:4,5).

அன்பு ஸ்திரீகளே, இன்றும் இதே வேலையைத்தான் பிசாசு, குறிப்பாக பெண்கள் மத்தியில் செய்து வருகிறான். எச்சரிக்கையாயிருப்போம். இவர்கள் இருவருடைய வீழ்ச்சி இயேசு கிறிஸ்துவின் மீட்பின் திட்டத்திற்கு ஆரம்பமானது. இந்தத் திட்டம் சிருஷ்டிப்பிற்கு முன்பே ஏற்படுத்தப்பட்ட தேவதிட்டம் என்பதை மறந்துவிடக்கூடாது. இதுவே வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனே மெய்யான தேவன் என நிரூபிக்கிறது. பழைய உடன்படிக்கை என்பது நியாயப்பிரமாணம் ஆகும். "நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோம.3:19). மேற்கண்ட ஒவ்வொரு உடன்படிக்கையும் வரவிருக்கும் புதிய உடன்படிக்கைக்கும் மனுக்குலத்தின் இரட்சகராகிய கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கும், அதாவது சபை தோன்றுவதற்கும் மிக அருகிலேயே இருந்தது. எனவே கிறிஸ்தவ ஸ்திரீகள் பழைய உடன்படிக்கையும் (பழையஏற்பாட்டு), புதிய உடன்படிக்கையையும் (புதிய ஏற்பாட்டு) குழப்பிக் கொள்ளக் கூடாது. கிறிஸ்தவர்களாகிய நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது புதிய உடன்படிக்கையே. ஆதியிலிருந்து மனுமக்களோடு உடன்படிக்கைகளைப் பண்ணிக்கொண்டு வந்த தேவனாகிய கர்த்தர் இன்று நம் ஒவ்வொருவரோடும் உடன்படிக்கை பண்ணியுள்ளார். **– தொடரும்**

# கேள்வியும் வசன ரீதியான பதிலும்

1. **எது சத்தியம்?** - தேவனுடைய வசனமே சத்தியம் - (யோவான்17:17)
2. **ராஜரீக பிரமாணம் எது?** - உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக - (யாக்கோபு2:8)
3. **தேவன் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் எது?** - நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் - (1யோவான்2:25)
4. **கிறிஸ்துவின் பிரமாணத்தை எப்படி நிறைவேற்ற முடியும்?** - ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து - (கலாத்தியர்6:2)
5. **அன்பை எப்படி நாம் அறிந்துகொண்டோம்?** - அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்துகொண்டோம் - (1யோவான்3:16)
6. **எது அன்பு?** - நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு - (2யோவான்6)
7. **பிதாவையும் குமாரனையும் உடையவன் யார்?** - கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் - (2யோவான்9)
8. **எது நித்திய ஜீவன்?** - ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் - (யோவான் 17:3)
9. **முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு என்னபேர்வழங்கிற்று?** - கிறிஸ்தவர்கள் - (அப்போஸ்தலர்11:26)
10. **நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் யாருக்கே சொல்லுகிறது?** - நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம் - (ரோமர்3:19)




***நீங்கள் இவ்விதழின் வாசகரா?***

***அப்படியானால் உங்களுடைய பங்கு என்ன?***

- உங்கள் நண்பர்களுக்கும் இவ்விதழ்கிடைக்க அவர்களது முகவரி அனுப்பலாம்.
- வாசகர்களை தெரிந்து கொண்டு அவர்களுக்காக சந்தா செலுத்தலாம்.
- உங்கள் பகுதியில் சபையாக கூடி இச்செய்திகளை வாசித்துக்காட்டலாம்.
- இவ்விதழின் ஆசிரியரை அழைத்து சுவிசேஷ கூட்டங்கள் நடத்தலாம்.
- இவ்விதழின் வளர்ச்சிக்காக ஜெபிக்கலாம்.
- உங்களுடைய கருத்துக்களை அவ்வப்போது தெரியப்படுத்தலாம்.
- மாதம் ஒரு முறை அலுவலகத்திற்கு வந்து உதவிடலாம்.

9443558041 / 6379350509

# தமிழக கிறிஸ்துவின் சபை
# ஊழியர்களுக்கான சிறப்புக்கூட்டம்

**நாள்:** 18.08.2023 வெள்ளிக் கிழமை

**நேரம்:** காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

**இடம்:** வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்

நோக்கம்:
- ஊழியர்களை ஊக்கப்படுத்துதல்
- நாற்பது வயது நிறம்பியவருக்கு மருத்துவத்திற்கு உதவி
- அவரவருடைய முகவரியுடன் கைபிரதிகள் அச்சிட்டு கொடுப்பது
- சபை வளர்ச்சிக்கான ஆவிக்குரிய ஆலோசனை வழங்குதல்
- சட்ட ஆலோசனை வழங்குதல்

**நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்" - இயேசு (யோவான் 13:35)**

**குறிப்பு:** 1. இக்கூட்டத்தில் கலந்துகொள்ள விருப்பமுள்ள கிறிஸ்துவின் சபை ஊழியர்கள் ஆகஸ்ட் 10ம் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

2. மருத்துவத்திற்கு உதவி தேவைப்படுவோர் மட்டும் கீழ்க்கண்ட சான்றுகளின் நகல்களைக் கொண்டுவரவும்.
- நீங்கள் வேதாகம பள்ளியில் படித்தற்கான சான்று
- உங்களுடைய இருப்பிட முகவரிக்கான சான்று
- உங்களுடைய சபையாரின் பரிந்துரை கடிதம்

love God
love people
be a servant

**வாருங்கள் தமிழகத்தில் கிறிஸ்துவின் சபை**
**வளர்ச்சியடைய**
**ஒருமனப்பட்டு ஜெபித்து**
**நம் ஆண்டவர் இயேசுவின் கட்டளையை நிறைவேற்றுவோம்**

**சகல தொடர்புக்கும்:**
**சகோ.அர்ஜுனன், சபை ஊழியர்**
**கிறிஸ்துவின் சபை, வத்தலக்குண்டு**
**9443558041 மற்றும் 6379350509**

**இக்கூட்டங்களுக்கு உதவிசெய்வோர்**
**வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையார்**

# ஜெபியுங்கள்



- மணிப்பூர் கலவரத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து ஜனங்களுக்காக...
- பூமியிலே கர்த்தருடைய சமாதானம் நிலைத்திருப்பதற்காக...
- அடுத்தமாதம் நடைபெறவுள்ள 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' கூட்டங்களுக்காக...
- தமிழகத்தில் உள்ள அனைத்து கிறிஸ்துவின் சபை ஊழியங்களுக்காக...
- வாசகர்கள் இவ்விதழை படித்துவிட்டு மற்றவர்களுக்கு கொடுத்து உதவ...

"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" – 1தெசலோனிக்கேயர்5:17

# நான் யார்?

# Who Am I?



- நான் தேவனுடைய கிரியையை வெளிப்படும்படிக்கு இப்படிப்பிறந்தேன்
- நான் சுகமாக்கப்பட்டது உன்னதமானவருடைய உமிழ் நீரினால்
- என்னை சுகமாக்கினவர் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாதவர் என்றனர்
- நான் அவரை ஒரு தீர்க்கதரிசி என்றேன்
- என் தாய் தகப்பன் யூதர்களுக்கு பயந்ததினால் என்னை சுகப்படுத்தினவரை தெரியாது என்றார்கள்
- என்னை சுகப்படுத்தினவரை பின்பு ஒரு முறை கண்டேன்

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**



# ஊக்கமான அன்பு
## Passionate Love

*R.Melki*

**அ**ன்பு என்பது நம் எல்லோரும் அறிந்த ஒன்று பரிசுத்த வேதாகமத்தில் அந்த அன்பைப் பற்றி அதிகமாக பார்க்கிறோம். "பிரியமானவர்களே ஒருவரில் ஒருவர் அன்பாய் இருக்கக்கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான்; தேவன் அன்பாகவே இருக்கிறார்" என 1யோவான் 4: 7,8 வசனங்களில் வாசிக்கிறோம். நம்மை சிருஷ்டித்த தேவன் அன்பாகவே இருக்கிறார். உலகத்தில் இருக்கிற அன்பைப்போல அல்ல அவர் தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்காக ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தார்.

எனவே நாமும் ஒருவரில் ஒருவர் ஊக்கமான அன்பு கூரவேண்டியவர்களாயிருக்கிறோம். மனித நேயம் உலகத்தில் தலைத்தோங்க வேண்டுமென்றால் நம்மைப்போல மாம்சத்தில் இருக்கிறவர்களிடத்தில் நாம் அன்புடன் நடந்துகொள்ளவேண்டும். அப்படி அன்பாக நடக்கவில்லையென்றால் நாம் தேவனை அறியவில்லை என வேதம் சொல்லுகிறது. ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கிறார்.

மேலும் வேதாகமத்தில் அன்பைப்பற்றி இரண்டு இடங்களில் பார்க்கிறோம். ஒன்று யோனத்தானும் தாவீதும் ஒருவரையொருவர் சிநேகித்தார்கள். யோனத்தான் தாவீதை தன் உயிரைப்போல சிநேகித்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துமாவோடே ஒன்றாய் இசைந்திருந்தது; யோனத்தான் அவனைத் தன் உயிரைப்போலச் சிநேகித்தான்" 1சாமுவேல் 18:1. இன்றைக்கு இப்படிப்பட்ட சிநேகத்தை பார்த்து இருக்கிறீர்களா? யோனத்தானும் தாவீதும் அவ்விதமாக இருந்தார்கள். யோனத்தானுடைய தகப்பன் சவுல் ராஜாவுக்கு இது கொஞ்சமும் பிடிக்கவில்லை. என்றாலும் இருவரும் இணைபிரியாது இருந்தார்கள்.

இரண்டாவது: இயேசுவை அதிகமாக நேசித்த பேதுரு; "ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான் (லூக்கா 22:33). நடந்தது என்ன? அன்று இரவே உயிருக்குப் பயந்து இயேசுவை மூன்று முறை மறுதலித்தான். நாமும் சிலவேளைகளில் உணர்ச்சிவசப்பட்டு இப்படி சொல்லி விடுவோம். பிரச்சனை வருவதுபோல இருந்தால் உடனே மறுதலித்துவிடுவோம். தேவன் நம்மீது வைத்துள்ள அன்பு நிலையானது நித்தியமானது. அவர் ஒருபோதும் நம்மை புறம்பே தள்ளாத தேவன். எனவே "தேவன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்திருக்க, நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1யோவான் 4:11).

இவ்விதமாக நீங்களும் அன்பு செலுத்தி, தேவசித்தம் செய்யுங்கள். இப்பூமியில் நமக்கு வேண்டிய அனைத்தையும் நம்முடைய பிதாவாகிய தேவன் நமக்கு தந்திருக்கிறார். அவர் நல்லோர் மேலும் தீயோர்மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறார். எனவே அவர் எல்லோரையும் நேசிப்பதைப்போல நாமும் நம்மைப்போல மாம்சத்தில் இருக்கிறவர்களுக்கு ஒழிக்காமல் அவர்களிடத்தில் தேவ அன்பை செலுத்துவோம். ஊக்கமான அன்பு உங்களை உண்டாக்கினவரிடத்தில் கொண்டுபோய் சேர்க்கும். இவ்விதமான அன்பு அகாப்பே அன்பாக இருக்கிறது. இவ்விதமான அன்பு நமக்காக உயிரையே கொடுத்தது. அந்த உயிரை நமக்காக கொடுத்தவர் நம் ஆண்டவர் இயேசு. அவரிலே அன்புகூருங்கள்.

சிறுவர் பகுதி



# பரியாசம்

வேத பகுதி: 2இராஜாக்கள் 2:23-25

கர்த்தருக்குள் பிரியமான பிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இன்று நாம் பரியாசத்தைக் குறித்துப் பார்ப்போம்.

மற்றவர்களை பரியாசம் செய்வது கர்த்தருக்கு கொஞ்சமும் பிடிக்காது. அப்படியிருக்கும்போது மற்றவர்களை பரியாசம் செய்யலாமா? கூடாது இல்லையா. எலியாவின் நாட்களில் அவர் ஒருமுறை பெத்தேலுக்குப் போனாரு. வழியில் நடந்துபோகையில் பிள்ளைகள் பட்டணத்திலிருந்து வந்து, எலிசாவைப்பார்த்து என்னசொன்னாங்கனு தெரியுமா? மொட்டைத்தலையா ஏறிப்போ, மொட்டத்தலையா ஏறிப்போ என்று சொல்லி நிந்தித்தாங்க. எதற்கு மொட்டத்தலையா ஏறிப்போ மொட்டத்தலையா ஏறிப்போ என்று சொன்னாங்கனா எலிசாவுக்கு முன்பாக இருந்த தீர்க்கதரிசி எலியா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஆகையால் இந்த பிள்ளைகள் எலிசாவையும் பார்த்து இப்படியாக சொல்லி கேலி செய்தாங்க. இப்படி செய்தா யாருக்குதான் கோபம் வராம இருக்கும்.

உடனே எலிசா என்ன செய்தாரு தெரியுமா? அவர் திரும்பி அந்தப்பிள்ளைகளைப் பார்த்து சபித்தார்; உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் வந்து அங்கே கூடியிருந்த பிள்ளைகளை பிறீப்போட்டது. ஏன் அப்படி கேலி செய்யனும்? கேலி செய்ததாலே தானே அந்தப் பிள்ளைகளை கரடி வந்து பிறீப்போட்டது. கேலி செய்யாம இருந்திருந்தால் எலிசா தாத்தா நல்ல கதைகளை சொல்லியிருப்பாரு, இல்லைனா ஒரு அற்புதம் செய்திருப்பாரு. பெத்தேலுக்கு வருவதற்கு முன்புதான் ஒரு அற்புதம் செய்தாரு அது என்ன வென்று தெரியுமா? சொல்ரே கவனமா கேளுங்க. பட்டணம் குடியிருப்பதற்கு நல்லதா இருந்தது ஆனா அங்கே இருந்த தண்ணீர் கெட்டது, நிலமும் பாழ்நிலமாயிருந்தது.

அப்பொழுது எலிசா ஒரு புதுத்தோண்டியை எடுத்து அதிலே உப்புப் போட்டுக் கொண்டுவாருங்கள் என்று சொன்னார் அந்தப்படியாக கொண்டுவந்தார்கள். எலிசா அந்த நீருற்றண்டைக்குப்போய், உப்பை அதிலே போட்டு இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லி அதை சரிசெய்தார். எப்படிப்பட்ட அற்புதம் பார்த்தீர்களா? தேவனுடைய அற்புதங்களை அறியாத இந்தப்பிள்ளைகள் எலிசாவை பரியாசம் செய்ததால் 42 பிள்ளைகளை கரடி பிறீப்போட்டது. நாமும் தேவனுடைய மக்களை பரியாசம் செய்யாது அவர்களுடைய ஆசீர்வாதமான வார்த்தைக்கு காத்திருப்போம்.

**மனப்பாட வசனம்:**
**“ பரியாசக்காரன் ஞானத்தைத் தேடியும் கண்டுபிடியான்;**
**புத்தியுள்ளவனுக்கோ அறிவு லேசாய் வரும்”- நீதிமொழிகள் 14:6**

## வேத அறிவுப் போட்டி எண்: 275

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. எந்த ராஜா ஒரு கோவிலையும் கட்டி, லேவியின் புத்திரராயிராத ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியராக்கினான்?
2. ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காக என்ன செய்யுங்கள் என்றார்?
3. யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர்பற்றி மேலே என்ன கொடுப்பார்கள்?
4. அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபைபெற்றோம் என்ற தீர்க்கதரிசி யார்?
5. தேவதூதன் தன்னுடைய பட்டயத்தை உறையிலே திரும்பப் போட வேண்டும் என்று அவனுக்குச் சொன்னவர் எவர்?
6. நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும், சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?
7. பூமியின் சகல ராஜாக்களைப்பார்க்கிலும் ஐசுவரியத்திலும் ஞானத்திலும் சிறந்தவனாயிருந்த ராஜா யார்?
8. இஸ்ரவேல் புத்திரருடைய இலக்கம் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும், எவர்கள் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள்?
9. எங்கள் தேவனுக்கு ஆலயத்தைக் கட்டுகிறதற்கு உங்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று எவர்களைப் பார்த்து சொன்னார்கள்?
10. யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து என்னவாயிருக்கிறார்?

## வேதாகம ஆய்வு... 59 சாலொமோன் – Solomon



1. தாவீதின் கடைசி மகன்
2. இவன் தாய் பத்சேபாள் – 1நாளா.3:5
3. இவனுக்கு மற்றொரு பெயர் (யெதிதியா) – 2சாமு.12:25
4. சாலொமோன் தேவாலயத்தை கட்டினான் – 2நாளா.7;11
5. 40 வருஷம் எருசலேமிலே அரசாண்டான் – 1இரா.11:42

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.

July 2023



இதழின்
ஆசிரியர், அவருடைய மனைவி,
கிறிஸ்துவின் சபையார்
மற்றும்
சுவிசேஷகர்கள்

"புது உடன்படிக்கையின்
ஊழியக்காரராயிருக்கும்படி,
அவரே எங்களைத்
தகுதியுள்ளவர்களாக்கினார்"
2கொரிந்தியர் 3:6

சகோதரர் ராஜமுருகனோடு இணைந்து
பணியாற்றும் சகோதரர்கள்
செங்கல்பட்டு மற்றும் திருவண்ணாமலை மாவட்டம்



Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

எ மது புதிய
வெளியிடு
இன்றே வாங்கி
பயன்பெறுங்கள்



To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

love God
love people
be a servant

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan